**செய்தி வெளியீடு எண்:326** **நாள்:26.06.2021**

## செய்தி வெளியீடு

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் 116ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு இன்று(26.6.2021) மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் தியாகத் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்துகின்ற வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 26ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அதன்படி, சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு இன்று(26.6.2021) காலை 8.30 மணியளவில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், தென் சென்னை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு.ஜெ.கருணாநிதி அவர்கள், திரு.த.வேலு அவர்கள், டாக்டர். நா. எழிலன் அவர்கள் மற்றும் ம.பொ.சி. அவர்களின் குடும்பத்தினர், மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர்கள் உட்பட உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**